# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :28 October 2025*

கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*


# EDITORIAL BOARD


Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in



**Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan**

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research


## EDITORIAL BOARD


**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்
மெ.பேபி நிஷாந்தினி

பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்
ப.ராம்குமார்

புறநானூற்றில் உயிரியல் செய்திகள்
எம்ஜிராமச்சந்திரன். வெ

புறநானூற்றில் தமிழர் பண்பாடு
திருமதி கா.சுகன்யா,

செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு
இரா.சினேகலதா

திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்
முனைவர் இரா.ஜெய்சங்கர்

திருக்குறளில் மருத்துவச் செய்திகள்
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை
க.நித்தியா

அபிராமி அந்தாதி - ஒரு பார்வை
சா.கஸ்தூரி

வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்
முனைவர் த. சுபஜா

வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை
முனைவர்ப.தனஞ்செயன்

தெய்வங்களும் கோவில்களும்
அ.அறிவுக்கொடி

பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்
க.கார்த்திகா

அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வெளவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

**பொதிகைமலையின் ஆயண்டிரன்**
**முனைவர் த. முத்துலட்சுமி**

**பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்**
**கி.தமிழரசி**

**பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்**
**ம.கலைச்செல்வன்**

**இலக்கியங்களும் பசிப்பிணியும்**
**முனைவர் ப. மணிகண்டன்**

**அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்**
**முனைவர் அ.புஷ்பா**

**கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்**
**கு.நிவேதா**

**மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு**
**முனைவர் ஈ இசக்கியம்மாள்**

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

**திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.**
**(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)**
**திரு. விசுமாப்போடி சசிகரன்**

**பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி**
**முனைவர் வே.இரவி**

**கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்**
**முனைவர் அ. மதலேன்**

**சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்**
**முனைவர்அ. அமுல்ராஜ்**

**பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**

**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

---

**நன்றி**

# தொல்லியல்

# *KEEZHDI EXCAVATION — THE ANCIENT HISTORICAL BACKGROUND OF TAMILS*

***Dr A. Madeline****, Assistant Professor, Department of Tamil, St. Joseph's College of Arts and Science (Autonomous), Cuddalore - 1.https://orcid.org/0000-0003-4521-5606*

***Abstract***

*The Keezhdi excavation is an important archaeological site that reveals the ancient history of the Tamils. This is a treasury of ancient Tamil civilization. This was obtained through underground excavation — Below are cultural periods, Tamil history, Urbanisation, Literacy, Agriculture, Construction, Brahmi scripts, Handicrafts, Weaving, Sports and entertainment obtained from this Keezhadi excavation.*

***Keywords:****Excavation, Agriculture, Construction, Literacy, Ancient history, Background.*

## கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்

**முனைவர் அ. மதலேன்,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கடலூர் — 1. *https://orcid.org/0000-0003-4521-5606*

**ஆய்வுச் சுருக்கம்**

கீழடி அகழ்வாராய்ச்சி தமிழர்களின் தொன்மையான வரலாற்றை பறைசாற்றும் முக்கியமான ஒரு தொல்லியல் தளமாகும். இது பழந்தமிழர் நாகரிகத்தின் கருவூலம். இந்த கீழடி அகழ்வாராய்ச்சி மூலம் பெறப்பட்ட — கீழடியின் பண்பாட்டு காலகட்டங்கள். பண்பாட்டுக் கூறுகள், தமிழர் வரலாறு, நகர்மயமாதல், எழுத்தறிவு, வேளாண்மை, கட்டுமானம், பிராமி எழுத்துகள், கைவினைத் தொழில்கள், நெசவு, விளையாட்டு மற்றும் பொழுது போக்குகள் குறித்து இவ்வாய்வு ஆராய்கிறது.

**திறவுச் சொற்கள்:** அகழாய்வு, வேளாண்மை, கட்டுமானம், எழுத்தறிவு, தொன்மையான வரலாறு, பின்புலம்.

**முன்னுரை**

கீழடி என்பது தமிழ்நாட்டில் உள்ள ஒரு முக்கியமான தொல்லியல் தளம். இது தென்தமிழகத்தில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடி என்ற கிராமத்தில் தென்னந்தோப்புகளுக்கு மத்தியில் 15 அடி ஆழத்தில் அகழிகளில் புதைக்கப்பட்ட சுடுமண்

பானைகளின் துண்டுகள், செங்கல் கட்டடமைப்புகள் இருந்ததற்கான தடையங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தப் பொருட்கள் 2000 முதல் 2500 ஆண்டுகள் வரை பழமைவாய்ந்தவை. சுமார் கி.மு. 580ஐ சேர்ந்தவை என தமிழ்நாட்டைச் சேர்ந்த தொல்லியல் துறை அதிகாரிகள் கூறுகின்றனர். இந்த கண்டுபிடிப்புகள் இந்திய துணைக் கண்டத்தின் தற்போதைய நாகரிகம் பற்றிய கதைகளை மாற்றி அமைக்கும் வகையில் இருப்பதாக கூறுகின்றனர். இது நவீன இந்தியாவின் அற்புதமான கண்டுபிடிப்புகளில் ஒன்று. கடந்த காலத்தைப் பற்றிய நமது புரிதலை மேலும் ஆழப்படுத்த ஒரு அரிய வாய்ப்பாகும் என்கின்றனர் வரலாற்று ஆர்வலர்கள். இதனடிப்படையில் கீழடி அகழாய்வு தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம் கொண்டது என்பதைக் குறித்த ஒரு ஆய்வாக இக்கட்டுரை அமைகின்றது.

கீழடி அகழ்வாராய்ச்சி

2013 ஆம் ஆண்டில் இந்திய தொல்லியல் ஆய்வு ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணனால் அகழ்வாராய்ச்சிக்காக பட்டியலிடப்பட்ட 100 இடங்களில் கீழடியும் ஒன்றாகும். மதுரைக்கு அருகே 1975ஆம் ஆண்டு இந்த இடத்தில் ஒரு பள்ளி ஆசிரியர் சிவப்பு மற்றும் கருப்பு நிற மண்பாண்ட பொருளை கண்டுபிடித்தாலும் இங்கு 100 ஏக்கர் நிலத்தை அகழாய்வுக்கு தேர்ந்தெடுத்தனர்.

2014ஆம் ஆண்டு முதல் 10 கட்டங்களாக நடந்த அகழாய்வில் இதுவரை முதுமக்கள் தாழிகள், செப்புக்காசுகள், மணிகள், சுடுமண்ணால் ஆன பொருட்கள் என 15000க்கும் மேற்பட்ட தொல்லியல் பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அகழாய்வுக்காக ஒதுக்கப்பட்ட 100 ஏக்கரில் வெறும் 4 ஏக்கரில் இருந்து மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டவை. தற்போது இவை அருகில் உள்ள அருங்காட்சியத்தில் காட்சிபடுத்தப்பட்டுள்ளன.

“செங்கல் கட்டடமைப்பு மற்றும் நீர் அமைப்புகள்தான் இவற்றி;ல் முக்கிய கண்டுபிடிப்புகளாக உள்ளன. இவை 2500 ஆண்டுகளுக்கு முன்பே நகர்புற கட்டடமைப்புகள் இருந்ததற்கான சான்றாகும்” என்கிறார் கீழடியில் மாநில தொல்லியல் குழுவை வழிநடத்தும் அஜய்குமார்.

“இது ஒரு கல்வியறிவு பெற்ற நகர்புற சமூகமாக இருந்துள்ளது. தனித்தனியே வாழ்விடங்களை அமைத்து தொழில்துறை வேலைகளைச் செய்து வந்துள்ளனர். உயிரிழந்தவர்களை அடக்கம் செய்யும் நடைமுறையும் இங்கு இருந்துள்ளது” என அஜய்குமார் குறிப்பிடுகிறார். இது தென்னிந்தியாவின் முதல் பெரிய நன்கு வரையறுக்கப்பட்ட பண்டைய நகர்புற குடியேற்றம் என்பதை குறிப்பிடுவதாக அவர் தெரிவித்தார்.

**கீழடியில் மூன்று பண்பாட்டு காலக்கட்டடங்கள்**

கீழடியில் நடந்த அகழாய்வின் அடிப்படையில் பார்க்கும்போது அங்கே மூன்று பண்பாட்டு காலகட்டடங்கள் நிலவியிருக்க வேண்டும் எனக் கருதுவதாக அமர்நாத் ராமகிருஷ்ணன் தனது அறிக்கையில் கூறியிருக்கிறார். இதில் முதலாவது காலகட்டம் கி.மு. எட்டாம் நூற்றாண்டிலிருந்து கி.மு ஐந்தாம் நூற்றாண்டு வரை நிலவியிருக்க வேண்டும் என்றும், இரண்டாவது காலகட்டம் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.மு. முதலாம் நூற்றாண்டின் முடிவுவரை இருந்திருக்கலாம் என்றும், மூன்றாவது காலகட்டம் கி.மு. ஒன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டையும் தாண்டி செல்வதாகவும் அமர்நாத் ராமகிருஷ்ணன் குறிப்பிட்டுருக்கிறார்.

**கீழடி அகழாய்வு பண்பாட்டுக் கூறுகள்**

கீழடி அகழாய்வு பண்பாட்டுக் கூறுகளை வெளிக்கொணரும் செங்கல் கட்டுமானங்கள், உறைக்கிணறுகள், கூரை ஓடுகள் மற்றும் அரிய தொல் பொருட்களான தங்க அணிகலன்களின் பாகங்கள், செம்பிலான பொருட்கள், இரும்பு பயன்பாட்டுப் பொருட்கள், சுடுமண்ணாலான ஆட்டக்காய்கள் விளையாட்டுச் சில்லுகள், காதணிகள், தக்களிகள், சுடுமண்ணாலான மணிகள், கண்ணாடி மணிகள், மதிப்புகுறைவான மணிகள், பானை ஓடு வகைகளான கருப்பு — சிவப்பு நிற பானை ஓடுகள், கருப்பு நிற ஓடுகள் பளபளப்பான சிவப்பு நிறபானை ஓடுகள், ரோம் நாட்டைச் சார்ந்த ரௌலட்டட் பானை ஓடுகளில் சாயல் கொண்ட பானை ஓடுகள் ஆகியவைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பானை வரைவதற்கு முன்னர் மற்றும் பின்னர் வரையப்பட்ட குறியீடுகள் தமிழி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் போன்றவையும் கண்டெடுக்கப்பட்டன.

இவை அனைத்தும் இந்த பகுதியில் வாழ்ந்த தமிழர்களின் பண்டைய நாகரிகத்தின் பண்பாட்டுச் செழிப்பினை வெளிப்படுத்துகிறது. கீழடியில் மிகப்பெரிய நிலப்பரப்பில் அமைந்துள்ள பண்பாட்டு மேடானது தென்னை மரங்களால் பாதுகாத்து வரப்பட்டுள்ளது. 25000 ஆண்டுகளுக்கு முந்தைய பண்டைய சமுதாயத்தின் பண்பாட்டு வளமையை மறைத்து வைத்துள்ள கீழடியினை அகழாய்வு செய்து முழுமையாக வெளிக்கொணர்வது அவசியமாகிறது.

**கற்காலக் கருவிகள்**

திருவள்ளுவர் மாவட்டம் அத்திரம் பாக்கம் அகழாய்வில் கண்டறியப்பட்ட முதற்கட்ட பழைய கற்காலக் கருவிகள் 15 லட்சம் ஆண்டுகள் என்றும், இரண்டாம் கட்ட பழைய கற்கால கருவிகள் 3,85,000 ஆண்டுகள் பழமையானது என்றும் கற்கருவிகளை காசுமோ

செனிக்நியூக்லைட் எனப்படும் இயலுலக புவிப்பரப்பில் ஒளி ஆய்வு செய்தததில் இக்கால முடிவுகள் பெறப்பட்டன எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அதேபோன்று நுண் கற்காலத்தைச் சேர்ந்த கற்காலக் கருவிகள் திருநெல்வேலி பகுதியிலும், வைகை மற்றும் குண்டாறு ஆற்றுப் படுக்கைகளிலும், புதிய கற்காலப் பண்பாடுகளின் கருவிகள் தமிழகத்தின் வடக்கு, வடமேற்குப் பகுதிகளில் குறிப்பாக தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களில் கிடைத்துள்ளன. அதன் அடுத்த காலகட்டமான இரும்புக் காலத்தைச்சார்ந்த சேலம் வட்டாரத்திலுள்ள மாங்காடு மற்றும் தெலுங்கனூர் ஊர்களிலுள்ள பெருங்கற்படை ஈமச்சின்னங்களில் கண்டறியப்பட்ட மாதிரிகளிலிருந்து இரும்பு காலம் கி.மு 2000 என காலக்கணக்கீடு செய்யப்பட்டுள்;ளது.

ஆதிச்சநல்லூர் முதுமக்கள் தாழி அகழாய்விலிருந்து சேகரிக்கப்பட்;ட கரிமம் காலக் கணக்கீடு செய்யப்பட்டதில் இதன் காலம் கி.மு எட்டாம் நூற்றாண்டு என்று வரையறை செய்யப்பட்டுள்ளது. தற்போது கீழடி அகழாய்வு சேகரிக்கப்பட்ட ஆறு கரிம பகுப்பாய்வுகளின் முடிவுகள் கீழடியின் கி.மு ஆறாம் நூற்றாண்டு என்று தெரியவருகிறது.

கீழடியில் 2018ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நான்காம் கட்ட அகழாய்வின் போது சேகரிக்கப்பட்ட ஆறு கரிம மாதிரிகள் அமெரிக்க நாட்டின் புளோரிடா மாகாணம், மியாமி நகரத்தில் அமைந்துள்ள பீட்டா பகுப்பாய்வு சோதனை ஆய்வகத்திற்கு அனுப்பட்டது. பகுப்பாய்விற்கு அனுப்பிய மாதிரிகளில் அதிகபட்சமாக 353 செ.மீ. ஆழத்தில் கிடைக்கப்பட்ட கரிமத்தின் காலம் கி.மு 580 என்று கணக்கீடு செய்யப்பட்ட ஆய்வறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. இக்காலக்கணிப்பின்படி கி.மு ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி ஒன்றாம் நூற்றாண்டு வரை வளமையான பண்பாடு கொண்ட பகுதியாக கீழடி விளங்கியிருக்க வேண்டுமென அறியமுடிகிறது.

**நகரமயமாதல்**

தமிழ்நாட்டு நகரமையமாதல் கி.மு மூன்றாம் நூற்றாண்னடு வாக்கில்தான் தொடங்கியது என இதுவரை கருதப்பட்டு வந்தது. ஆனால் தற்போது கிடைக்கப் பெற்றுள்ள சான்றுகளின் மூலம் வைகை கடற்கறையில் நகரமையமாதல் கி.மு ஆறாம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது என்று தெளிவாகிறது.

கீழடியில்தான் சுவர் கட்டமைப்புகள், வடிகால் அமைப்புகள் மற்றும் கிணறுகள் உட்பட்;ட 7500க்கும் மேற்பட்ட பழங்ககால கலைப்பொருட்களை அவர்கள் கண்டுப்பிடித்தனர். இவை அனைத்தும் செழித்து வளர்ந்த ஒரு அதிநவீன நகர்புற சமூக்கத்தின் சான்றுகள். இந்த கூறுகள் 2160 ஆண்டுகளுக்கும் மேலானவை என்பதை வெளிப்படுத்தியது

கார்பன் டேட்டிங் ஆகும். இது தமிழ் வரலாற்றில் சங்ககாலத்தின் காலமான கி.பி 2000ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

**தமிழ் பிராமியின் காலம்**

இதுவரை தமிழ் பிராமி எழுத்து வடிவத்தின் காலம் கி.மு 5 நூற்றாண்டு என அழகன் குளம், கொடுமணல், பொருநிதல் அகழாய்வுகளின்படி கருதப்பட்டு வந்தது. ஆனால் கீழடி அகழாய்வு கிடைத்த அறிவியல் ரீதியான காலக்கணிப்புகள் தமிழ் பிராமியின் காலம் மேலும் நூற்றாண்டுகள் (கி.மு 6ஆம் நூற்றாண்டு) பழமைவாய்ந்தது என்றும் முடிவுக்கு இட்டுச்செல்கிறது.

**எழுத்தறிவு காலம்**

எழுத்தறிவு தொடங்கிய காலம் கி.மு மூன்றாம் நூற்றாண்டு என்று இதுவரை கருதப்பட்டு வந்தது ஆனால் எழுத்து பொறிப்பு பெற்ற பானை ஓடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதின் மூலம் கி.மு 6ஆம் நூற்;றாண்டளவிலேயே தமிழகம் எழுத்தறிவு பெற்ற சமூகமாக விளங்கியுள்ளதை நிலைநிறுத்த முடிகிறது.

**கால்நடை வளர்ப்பு மற்றும் வேளாண்மை**

கீழடி அகழாய்வில் வெளிக்கொணரப்பட்ட விலங்குகளின் 70 எலும்புத்துண்டுகளின் மாதிரிகள் அறிவியல் அடிப்படையில் பகுப்பாய்வு செய்வதற்கு புனேவிலுள்ள முதுகலை மற்றும் ஆராய்ச்சி நிறுவணமான டெக்கான் கல்லூரிக்கு அனுப்பப்பட்டன. இந்;த எலும்புத் துண்டுகள் பகுப்பாய்வின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தப்பட்டதில் இவை திமிலுள்ள காளை, எருமை, வெள்ளாடு, கலைமான், காட்டுப்பன்றி மற்றும் மயில் ஆகிய உயிரினங்களுக்குரிய என்று அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் திமிலுள்ள காளை, பசு, எருமை, வெள்ளாடு ஆகிய விலங்கினங்கள் 53 சதவீதம் இடம்பெற்றுள்ளன. எனவே வேளாண்மைக்கு உறுதுணை செய்யும் வகையில் கால்நடைகள் வளர்க்கப்பட்டுள்ளன எனக் கருதலாம்.

இப்பகுப்பாய்வு முடிவுகள் மூலம் சங்ககாலச் சமூகம், வேளாண்மையை முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்ததோடு கால்நடை வளர்ப்பையும் மேற்கொண்டிருந்தது என்பது தெளிவாகிறது.

**உயிரியல் எச்சங்கள்**

கீழடியில் குதிரையின் எலும்புகள் கிடைத்திருப்பது தென்னிந்திய தொல்லியல் ஆய்வின் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. சங்கப்பாடலான பட்டினப்பாலையில் குதிரை குறிப்பிட்டிருந்தாலும் அதன் எச்சங்கள் முதல்முறையாக கீழடியில்தான் கிடைக்கின்றன.

கீழடி தொல்லில் தளத்தில் கிடைத்த உயிரியல் எச்சங்களை ஆய்வுசெய்த போது அதில் குறிப்பிடத்தக்க அளவில் நெற்பயிரின் எச்சங்களும் உமியும் கிடைத்திருப்பதை பார்க்கும்போது அங்கு பெரிய அளவில் நெற்பயிர் விளைவிக்கப்பட்டிருப்பது தெரிகிறது. இங்கு தொடர்ந்து விளைச்சல் அதிகரித்தது. குறிப்பாக நெற்பயிரின் விளைச்சல் தொடர்ந்து அதிகரித்ததன் காரணமாக இந்தப்பகுதியில் வர்த்தகம் அதிகரிக்க ஆரம்பித்தது. இதனால் ஏற்பட்ட உபரியால் உள்நாட்டு வெளிநாட்டு வணிகமும் வர்த்தகமும் நடக்க ஆரம்பித்து மெல்ல மெல்ல கீழடி ஒரு நகர்புறமாக மாற ஆரம்பித்தது.

கீழடியில் கிடைத்த விலங்குகளின் எச்சங்களின் ஆய்வு முடிவுகளின்படி பல்வேறு வகையான விலங்குகள் கீழடிபகுதில் வளர்க்கப்பட்டுள்ளன என்பதனை அறிய முடிகிறது. மேலும் கீழடியின் பொருளாதாரத்தின் அவை முக்கியப்பங்கை வகித்திருக்கக்கூடும். எருமை, ஆடு, செம்மறியாடு ஆகியவை கீழடி மக்களின் உணவுகளில் முக்கிய பங்கு வகித்திருக்கின்றன. வீடுகளி;ல் இந்த விலங்குகளை வளர்த்ததைப் போல கொம்புகள், தோல் போன்ற பொருள்களுக்காக மிருகங்களை வேட்டையாடுவதும் கீழடியில் நடந்திருக்கிறது. காட்டு மாடுகள், காட்டெருமைகள் போன்றவை வேட்டையாடப்பட்டிருக்கின்றன. நாய்கள் செல்லப் பிராணிகளாகவோ பாதுகாப்புக்காகவோ வளர்க்கப்பட்டிருக்கக்கூடும்.

**கட்டுமானம்**

கீழடி அகழாய்வு கண்டறியப்பட்ட செங்கற்கள், சுண்ணாம்புச் சாந்து கூரை ஓடுகள் மற்றும் சுடுமண்ணாலான உரைகிணற்றின் பூச்சி ஆகியவற்றின் மாதிரிகள் வேலூர் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கு ஆய்விற்காக அனுப்பப்பட்டன. இவை ஒவ்வொன்றிலும் சிலிக்கா மண், சுண்ணாம்பு, இரும்பு, அலுமினியம் மற்றும் மெக்னீசியம் போன்ற கனிமங்கள் காணக்கிடைக்கின்றன. அவற்றின் கலவை மற்றும் தன்மை குறித்து விரிவான அறிக்கை பெறப்பட்டுள்ளன.

செங்கல் மற்றும் கூரை ஓடுகளில் 80 சதவீதத்திற்கும் அதிகமாக சிலிக்காவும், பிணைப்புக் காரணியாக அதிகளவு சுண்ணாம்பும் கலந்துள்ளதையும், சுண்ணாம்புச் சாந்து 97 சதவீதம் சுண்ணாம்பு கொண்டிருந்தது. அக்காலகட்ட மக்கள் மிகத் தரமான கட்டுமான பொருட்களை பயன்படுத்தியுள்ளனர் என்பது தெரியவருகிறது.

**முடிவுரை**

கீழடியில் அண்மைக்கால அகழாய்வுகளும், அறிவியல் ரீதியான காலகணிப்புகளும், தமிழ்நாட்டில் 15 இலட்சம் ஆண்டுகளாக மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதும் தற்போதைய கீழடி ஆய்வுகள் மூலம் தமிழகத்தின் தொடக்ககால வரலாறு காலத்தில் கி.மு 6ஆம் நூற்றாண்டளவில் மக்கள் எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்பது உறுதியாகிறது.

கீழடியில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்களின் கரிமப் பகுப்பாய்வின் கீழடி பண்பாட்டின் காலம் கி.மு 6ஆம் நூற்றாண்டு என்பதை காட்டுகிறது.

சங்ககாலத்தில் இப்பகுதியில் வாழ்ந்திருந்த மக்கள் தங்கம், செம்பு, தந்தம், பளிங்குகல், கண்ணாடி, சூதுப்பவளம் போன்றவற்றால் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்துள்ளனர். இவை இவர்களின் பொருளாதார வளத்தைக் காட்;டுகின்றன. இச்சமூகம் பொருளாதாரத்தில் தன்நிறைவு அடைந்த நிலையில் தங்களது ஓய்வு நேரங்களில் உடற்பயிற்சி மற்றும் அறிவுத்திறனை பெருக்கும் விளையாட்டுக்களை விளையாடி பயனுள்ள வகையில் பொழுதுகளைக் கழித்துள்ளனர்.

சங்ககாலத்தில் இவ்வூர் மக்கள் வெளியூர் வடஇந்தியா மற்றும் உரோம் நாட்டுடன் வாணிபத் தொடர்புகள் கொண்டிருந்தனர் என்பதற்கு அப்பகுதியிலிருந்தே கொண்டுவரப்பட்ட பானைகள், மணிகள் போன்ற தொல்பொருள்கள் சான்று பகர்கின்றன.

இந்த கீழடி ஆய்வின்படி வைகைக்கரையில் வாழ்ந்த சங்ககால மக்கள் வேளாண்மை மூலம் பொருளாதாரத்தை பெருக்கி தன்னிறைவுடன் தங்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக்கொண்டு;ள்ளனர் என்பதனை அறிந்துக் கொள்ள முடிகிறது.

கீழடி அகழாய்வானது தமிழ்நாட்டின் தொன்மையை, அதாவது சங்ககாலத்தை பல நூற்றாண்டுகள் முன்னோக்கி எடுத்துச் சென்றுள்ளது என்பதை அறிந்துக் கொள்ள முடிகிறது.

**துணைநூல் பட்டியல்**

1. கீழடி, வைகை நதிக்கரையில் சங்ககால நகர நாகரிகம் புத்தகம், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

2. கீழடி, தொல்லியல் துறை, https;//www.tnarch.gov.in.

3. பிபிசி செய்திகள் தமிழ், 11, பிப்ரவரி 2023, https;//www.bbc.com

4. பிபிசி செய்திகள் தமிழ், 29, ஜீலை 2025, https;//www.bbc.com

5. The Hindu/https:/www.thehindu.com

*Reference*


1. *Keezhadi, Sangam Period urban civilization on the banks of the Vagai River, Tamilnadu Government Archaeological Department.*
2. *Keezhadi, Archaeological Department, https;//www.tnarch.gov.in.*
3. *BBC News Tamil, 11 February 2023, https;//www.bbc.com*
4. *BBC News Tamil 29 July 2025, https;//www.bbc.com*
5. *The Hindu/https:/www.thehindu.com*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com